# Annai Hajira Women's College

## Melapalayam, Tirunelveli-05

(A Unit of As-Sathiq Educational Society)

(Affiliated to Manonmaniam Sundaranar University)



# NEWSPAPER CLIPPINGS

# 2021-2022

# DINAMANI 16.08.2021

# பள்ளி, கல்லூரிகளில் சுதந்திர தின கொண்டாட்டம்

திருநெல்வேலி, ஆக.15: திருநெல்வேலியில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் சுதந்திர தின விழா ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.

பாளையங்கோட்டை புஷ்பலதா வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் சுதந்திர தின விழா இணையவழியில் கொண்டாடப்பட்டது. பள்ளித் தாளாளர் புஷ்பலதா பூரணன் தலைமை வகித்தார். பள்ளியின் இயக்குநர் பால சுப்பிரமணியம் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றார். தலைமை முதல்வர் புஷ்பவேணி ஐயப்பன் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். முதல்வர் கணேசன் ராஜ கோபாலன் சுதந்திர தின விழா குறித்துப் பேசினார்.

இதில், தேசியத் தலைவர்கள் போன்று உடையணிந்து மாணவர்-மாணவிகள் பேசுதல், கவிதை வாசித்தல், பாட்டுப் பாடுதல், நடனம் ஆடுதல், இசைக்கருவிகள் மீட்டல், விநாடி-வினா போட்டி ஆகியவை நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில், மாணவர்களும், ஆசிரியர்களும் இணையவழியில் பங்கேற்றனர்.

பாளையங்கோட்டை வேல்ஸ் வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், பள்ளித் தாளாளர் செந்தில் பிரகாஷ் தலைமை வகித்தார். இயக்குநர் திலகவதி முன்னிலை வகித்தார். முதல்வர் சுகந்தி சொர்ணலதா தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். சென்னை கூடுதல் காவல் ஆணையர் லோகநாதன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றார்.



புஷ்பலதா வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தின கொடியேற்றம். (வலது)அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் உறுதிமொழியேற்கும் எம். அப்துல் வஹாப் எம்எல்ஏ உள்ளிட்டோர்.

திருநெல்வேலி நகரம் விட்டில்ப்ளவர் மாடல் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவுக்கு, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்(இடைநிலை) வி.டைட்டஸ் ஜான் போஸ்கோ சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இதில், பள்ளி முதல்வர், துணை முதல்வர், ஆசிரியர்கள், ஊழியர்கள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை பள்ளித் தாளாளர் அ.மரிய சூசை செய்திருந்தார்.

வண்ணார்பேட்டை விவேகானந்தா வித்யாஷ்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவுக்கு, பள்ளித் தலைவர் சிவ சேதுராமன் தலைமை வகித்தார். தாளாளர் திருமாறன் முன்னிலை வகித்தார். துணை முதல்வர் ஜேக்கப் துரைராஜ் வரவேற்றார். திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உதவிப் பேராசிரியர் வெற்றிவேல் தேசியக் கொடியேற்றிவைத்து சிறப்புரையாற்றினார். ஆசிரியை சண்முக பிரியா நன்றி கூறினார்.

மகாராஜநகரில் உள்ள ஜெயந்திர சுவாமிகள் வெள்ளிவிழா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் தாளாளர் ஜெயந்திரன் வி. மணி தேசியக் கொடியேற்றினார். பள்ளி முதல்வர் ஜெயந்தி ஜெயந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**கல்லூரிகளில்...:** மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில் துணைவேந்தர் கா.பிச்சுமணி தேசியக்கொடியேற்றினார். பதிவாளர் (பொ) மருதகுட்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு. முஹம்மது சாதிக் தேசியக்கொடியேற்றினார். கல்லூரி ஆட்சிக்குழு உறுப்பினர் எம்.கே.எம். முஹம்மது நாசர் முன்னிலை வகித்தார். தேசிய இணை ராணுவப்படை அதிகாரி செய்யது அலி பாதுஷா, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக மேலாண்மையியல் துறைப் பேராசிரியர் சு. மாதவன் ஆகியோர் பேசினர். தமிழ்த் துறையும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் நீதி மன்றக் கிளையும் இணைந்து நடத்திய போட்டிகளில் வென்ற மாணவர்-மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இளைஞர் நலத்துறை ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறை இணைப் பேராசிரியருமான அ.மு. அயூப்கான், கல்லூரி அரசுதவி பெறா பாடப் பிரிவுகளின் துணை முதல்வர் எஸ்.எம்.ஏ. செய்யது முகம்மது காஜா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவுக்கு, கல்லூரித் தலைவர் எஸ். கே. செய்யது அகமது தலைமை வகித்தார். தாளாளர் எஸ்.கே. குதா முகம்மது, அஸ்ஸாதிக் கல்விக்கூட்டமைப்பு உறுப்பினர்கள் வி.எஸ்.டி. அமானுல்லாஹ், பி. எம்.ஹெச்.காதர், எஸ்.எம்.ஓ.முஹம்மது ஹனீப், எஸ்.எம்.காஜா நஜீமுதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் கே.ரஜப் பாத்திமா வரவேற்றார். பாளையங்கோட்டை சட்டப்பேரவை உறுப்பினர் எம். அப்துல் வஹாப் தேசியக்கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். பொருளாளர் ஓ.கே.ஜாபர் சாதிக், கே.ஆர்.சித்திக் அலி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதில், முன்னாள் எம்.பி. விஜிலா சத்தியானந்த், மாணவர் அணிச் செயலர் ரம்ஸான், பேராசிரியர்கள் மற்றும் உதவி அலுவலர்கள் பங்கேற்றனர்.

## THE HINDU 17.11.2021

# Seminar on personality development held

SPECIAL CORRESPONDENT
TIRUNELVELI

Annai Hajira Women's College, Melapalayam, organised a programme on 'Capacity building and personality development for girl students' on Tuesday as mandated by National Commission for Women, and 'My Government'

It focused on learning and applying the use of intuitive, logical and critical thinking, communication and interpersonal skills, not limited to cognitive or creative skills and sure will enhance outcome of employability.

A. Abdul Kader, former Head, Department of English, Sadakathullah Appa College, Palayamkottai, spoke on 'Personal capacity building' to identify career opportunities, preparing the right resume and presentation skills by exploring their innate strengths and weaknesses.

B. Beneson Thilagar Christadoss, Professor of English, St. John's College, Palayamkottai, spoke on 'Professional - career skills' while the third session on 'Digital literacy and effective use of social media' was handled by K.A. Mohamed Riyazudeen, Assistant Professor of Computer Science, Sadakathullah Appa College.

He stressed on awareness among women on safe use of Internet and social media platforms to protect them from cyber crimes and explained the resources available for them for preventing and handling cyber crimes.

Following the online quiz programme organised through 'MyGov', the participants were given certificates. A. Jayashee, Head, Department of Commerce, welcomed the speakers. K. Rajab Fathima, principal, presided.

## DINAKARAN 14.12.2021

### மேலப்பாளையம் கல்லூரியில்

# கொரோனா தடுப்பூசி முகாம்




நெல்லை, டிச. 14: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் நாட்டு நலப் பணி திட்டம் சார்பில் கொரோனா தடுப்பூசி முகாம் நடந்தது. பெருமாள்புரம் ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர்கள், முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு தடுப்பூசி போட்டனர். கல்லூரி மாணவிகள், பேராசிரியர்கள், பிற ஊழியர்கள் என அனைவரும் தடுப்பூசி போட்டு பயனடைந்தனர். முகாமிற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் ராமலெட்சுமி செய்திருந்தார்.

DINAKARAN 01.01.2022

மேலப்பாளையம்

# அன்னை ஹாஜிரா கல்லூரியில் மதுவிலக்கு விழிப்புணர்வு முகாம்



▶ மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரியில் என்எஸ்எஸ் சார்பில் விழிப்புணர்வு முகாம் நடந்தது.

நெல்லை, ஜன. 1: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரியில் என்எஸ்எஸ் சார்பில் விழிப்புணர்வு முகாம் நடந்தது.

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் மதுவிலக்கு மற்றும் மகளிர் எதிர்கொள்ளும் சமுதாயச் சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது. கல்லூரி தலைவர் செய்யது அகமது தலைமை வகித்து பேசினார். தாளாளர் குதா முகம்மது முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்றார். கல்லூரி பொருளாளர் ஜாபர் சாதிக் வாழ்த்திப் பேசினார். நெல்லை மாநகர மதுவிலக்குப் பிரிவு இன்ஸ்பெக்டர் முத்துலட்சுமி சிறப்புரை ஆற்றினார். முகாமில் பேராசிரியர்கள், மாணவிகள் என ஏராளமானோர் பங்கேற்று பயனடைந்தனர். ஏற்பாடுகளை கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் ராமலட்சுமி நன்றி கூறினார்.

# DINAKARAN 04.01.2022

அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில்

## இலவச மருத்துவ பரிசோதனை முகாம்

நெல்லை, ஜன. 4: நெல்லை மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடந்தது.

கல்லூரித் தலைவர் செய்யது அகமது தலைமை வகித்துப் பேசினார். கல்லூரி தாளாளர் குதா முகம்மது முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்றார். கல்லூரி பொருளாளர் ஜாபர் சாதிக் பேசினார். நெல்லை அகர்வால் கண் மருத்துவமனை டாக்டர் காயத்ரி தலைமையிலான மருத்துவக் குழுவினர் கல்லூரி மாணவிகள் மற்றும் பேராசிரியர்களுக்கு கண் பரிசோதனை செய்தனர்.

தூத்துக்குடி நீரிழிவு மையத்தின் மருத்துவ செயலாளர் பொன்சித்ரா மற்றும் ஆய்வக நுட்புநர் குமாரவேல் ஆகியோர் கல்லூரி பேராசிரியர்களுக்கு ரத்த அழுத்தம் மற்றும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறித்த பரிசோதனைகளை செய்தனர்.

முகாமில் கலந்து கொண்ட மாணவிகளும், பேராசிரியர்களும் பயனடைந்தனர். முகாமிற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ராமலெட்சுமி செய்திருந்தார்.

# DINAKARAN 12.01.2022

## மேலப்பாளையம் கல்லூரியில் பேராசிரியர்கள் பயிற்சி பட்டறை



நெல்லை, ஜன. 12: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியின் உள்தர உத்திரவாத அமைப்பு சார்பில் பேராசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி பட்டறை நடந்தது.

கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா தலைமை வகித்தார். கல்லூரியின் தமிழ்த்துறை தலைவர் ஷப்ரின் முனீர் வரவேற்றார். கல்லூரி தலைவர் செய்யது அகமது, கல்லூரி தாளாளர் குதா முகம்மது மற்றும் கல்லூரி பொருளாளர் ஜாபர் சாதிக் ஆகியோர் பேசினர். ஓமன் சுல்தான் குப்புஸ் பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் துறை பேராசிரியர் ஹமீது சுல்தான் கலந்து கொண்டு பேராசிரியர்களுக்கு 'அவுட்கம் பேஸ்டு லேர்னிங்' என்ற தலைப்பில் பயிற்சி அளித்தார். கீழக்கரை தாசீம் பீவி கல்லூரியின் முன்னாள் துணை முதல்வரும், ஆங்கிலத் துறை தலைவருமான சுலைகா சகீல் நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டார். கல்லூரியின் அனைத்து துறை பேராசிரியர்களும் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டு பயனடைந்தனர். வேதியியல் துறை தலைவர் அனுராதா நன்றி கூறினார்.

# DINATHANTHI 03.04.2022



**மேலப்பாளையம் கல்லூரியில் பட்டமளிப்பு விழா:**

## "சமூக முன்னேற்றம் ஏற்பட பெண்கல்வி அவசியம்"

**சிறுபான்மை நல ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ் பேச்சு**

நெல்லை, ஏப்.3-

நெல்லை மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. கல்லூரி தலைவர் செய்யது அகமது தலைமை தாங்கினார். அப்துல் வகாப் எம்.எல்.ஏ., அஸ்ஸாதிக் கல்வி கூட்டமைப்பு பொருளாளர் ஜாபர் சாதிக், கல்லூரி தாளாளர் குதா முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்று பேசினார். புரொபஷனல் கொரியர் நிர்வாக இயக்குனர் அகமது மீரான் சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு சிறுபான்மை நல ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு 304 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்தி பேசினார். இதில் 15 மாணவிகள் பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் இடம் பெற்றிருந்தனர்.

விழாவில் பீட்டர் அல்போன்ஸ் பேசும்போது கூறியதாவது:-

பெண்கல்வி இல்லாத சமுதாயம் உயர்வடையாது. பெண்கள் பல சவால்களை எதிர்கொண்டால்தான் கல்வியில் சாதனை புரிய முடியும். கல்வி, பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய கடுமையாக உழைக்க வேண்டும். மாற்றங்களை எதிர்கொள்ள அனைவரும் தயாராக இருக்க வேண்டும்.

மனிதநேயம் மிகவும் அவசியமாகும். மனிதநேயம் இல்லாத கல்வி பாவமானது. பெண் கல்வியால்தான் சமூக முன்னேற்றம் ஏற்படும். சமுதாயத்தில் மாற்றங்கள் நிகழும். எனவே பெண் கல்விக்கு தமிழக அரசு மிகவும் முக்கியத்துவம் அளித்து வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக கல்லூரி ஆண்டு விழா நடந்தது. விழாவில் முன்னாள் எம்.பி. விஜிலா சத்தியானந்த், அஸ்ஸாதிக் கல்வி கூட்டமைப்பு உறுப்பினர்கள் நிஜாமுதீன், காதர் மைதீன், அமானுல்லாஹ், காஜா நிஜிமுத்தீன், முகமது ஹனீப், டாக்டர் அமீர்கான், ஐக்கிய அரபு அமீரகங்கள் வெளிநாடுவாழ் தமிழர்கள் இந்திய நலச்சங்க தலைவர் மீரான்.

தமிழ்நாடு ஜமா அத்துல் உலமா சபை பொதுச்செயலாளர் அன்வர் பாஷா, மேலப்பாளையம் மண்டல தலைவர் கதிஜா இக்லாம் பாசிலா, கவுன்சிலர்கள் ரசூல்மைதீன், சகாய ஜூலியட் மேரி, ஆமினா பீவி, அம்பிகா, நித்யபாலையா, ரம்ஜான் அலி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## DINAMANI 03.04.2022

திருநெல்வேலி/தென்காசி

# மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா கல்லூரியில் பட்டமளிப்பு விழா

திருநெல்வேலி, ஏப். 2: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் 18-ஆவது ஆண்டு விழா மற்றும் 14-ஆவது பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

மேலப்பாளையம் அலிய்யா அரபிக் கல்லூரி பேராசிரியர் அஷ்ரப் அலி பாகவி கிரா அத் ஓதினார். அஸ்ஸாதிக் கல்வி கூட்டமைப்பு தலைவர் செய்யது அகமது தலைமை வகித்தார்.

கல்லூரித் தாளாளர் குதா முகம்மது, அஸ்ஸாதிக் கல்வி கூட்டமைப்பு உறுப்பினர்கள் நிஜாமுதீன், காதர் மைதீன், அமனுல்லாஹ், காஜா நஜீமுத்தீன், முகம்மது ஹனீப் முன்னிலை வகித்தனர். கூட்டமைப்பு பொருளாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார். கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா ஆண்டறிக்கை படித்தார்.

இதில், தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ் கலந்துகொண்டு, 295 இளங்கலை, 9 முதுகலை மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிப் பேசினார்.

பாளை. சட்டப்பேரவை உறுப்பினர் மு. அப்துல் வஹாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் சரவணன், துணை மேயர் கே.ஆர். ராஜு, ஐக்கிய அரபு அமீரக வெளிநாடு வாழ் தமிழர்கள் இந்திய நலச் சங்க தலைவர் மீரான் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்குகிறார் தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ்.

## DINATHANTHI 03.04.2022

தினகரன் மாநகர்

: காலை 7.30 - 8.30; மாலை 3.30 - 4.30.
: மாலை 4.30 - 6.00 மணி வரை.
மதியம் 12.00 - 1.30 மணி வரை.
ம் : உத்திரம், அஸ்தம்.

**வானிலை**

| இன்று | | நாளை | |
|---|---|---|---|
| அதிகபட்சம் | குறைந்தபட்சம் | அதிகபட்சம் | குறைந்தபட்சம் |
| 101.0 F /39.0C | 76.0 F /25.0C | 99.0 F /37.0C | 75.0 F /24.0C |

மேகமூட்டத்துடன் கடும் வெப்பம் காணப்படும்.

### நெல்லை கல்லூரியில் பட்டமளிப்பு விழா

# கல்வி தான் பெண்களிடம் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும்

## சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ் பேச்சு



மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியின் 14வது பட்டமளிப்பு விழாவில் தமிழ்நாடு சிறுபான்மை நல ஆணைய தலைவர் பீட்டர்அல்போன்ஸ் மாணவிகளுக்கு பட்டம் வழங்கினார். அருகில் அப்துல்வகாப் எம்எல்ஏ.

**நெல்லை, ஏப். 3:** கல்வி தான் பெண்களிடம் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நெல்லை கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் மாநில சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ் பேசினார்.

நெல்லை மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடந்தது. அஸ்ஸாதிக் கல்விக் கூட்டமைப்பு தலைவர் செய்யது அகமது தலைமை வகித்தார். நெல்லை மத்திய மாவட்ட திமுக செயலாளர் அப்துல்வஹாப் எம்எல்ஏ முன்னிலை வகித்தார். விழாவில் சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், 304 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசியதாவது:

பெண்களுக்கு கல்வி அளிப்பதன் மூலம் எதிர்காலத்தில் வானம் உங்கள் வசப்படும். இன்று பட்டம் பெறும் நீங்கள் நாளை, என்னை விமான, ரயில், பஸ் நிலையங்களில் சந்திக்கும் போது, உங்களிடம் தான் நான் பட்டம் பெற்றேன். இன்று கலெக்டராக உயர்ந்திருக்கிறேன் என்று சொன்னால் இந்த கல்வி நிறுவனத்தை உருவாக்கியவர்களின் நோக்கம் நிறைவேறும்.

பெண்கள் துணிவு, மாற்றம், எதிர்கொள்ளும் திறன் ஆகியவற்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பெண் கல்வி இல்லாத சமூகம் ஒரு நாளும் முன்னேறாது. நல்ல கல்வி தான் பெண்களிடம் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும்.

அந்த வகையில் உயர் கல்விக்காக கல்லூரியில் சேரும் மாணவிகளுக்கு மாதம்தோறும் ரூ.1000 வழங்கும் திட்டத்தை தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். மொழி, இனம், சாதி, உணவுப் பழக்க வழக்கம் ஆகியவற்றால் நாம் வேறுபடலாம். ஆனால் உள்ளத்தால் அனைவரும் தமிழர்கள் என்பதுதான் நமது அடையாளம். தமிழர்கள் வாழ்க்கையில் வெல்வோம், தமிழகத்தை தூக்கி நிறுத்துவோம். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் பேசிய அப்துல்வஹாப் எம்எல்ஏ, கல்லூரிக்கு தேவையான இடத்தை தமிழக முதல்வர் மூலம் பெற்றுத் தருவேன், என்றார்.

புரொபஷனல் கூரியர் நிர்வாக இயக்குநர் அஹமது மீரான் பேசினார். முன்னதாக கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்றார். கல்லூரி தாளாளர் குதா முகம்மது நன்றி கூறினார்.

முன்னதாக நடந்த ஆண்டு விழாவில் அமீரக திமுக அமைப்பாளர் எஸ்எஸ் மீரான், அஸ்ஸாதிக் கல்விக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் டாக்டர் நிஜாமுத்தீன், பாதர் மைதீன், அமானுல்லாஹ், காஜா நஜிமுத்தீன், முஹம்மது ஹனீப், முன்னாள் எம்பி விஜிலா சத்யானந்த், கப்பல் துறை முன்னாள் தேசிய ஆலோசகர் அமீர்கான், ஜமாத்துல் உலமா சபை பொதுச் செயலாளர் அன்வர் பாதுஷா ஆகியோர் பேசினார். பேராசிரியர் அஷ்ரப் அலி பாக்கவி கிராஅத் ஓதினார். கல்விக் கூட்டமைப்பு பொருளாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார்.

மேலப்பாளையம் மண்டல தலைவர் கதீஜா இக்லாம் பாசிலா, கவுன்சிலர்கள் ரசூல் மைதீன், ரம்ஜான் அலி, சகாய ஜூலியட் மேரி, நித்திய பாலையா, சபி அமீர் பாத்து, ஆமினா பீவி, சிறுபான்மை பிரிவு அப்துல்காதர், இளைஞர் காங்கிரஸ் முன்னாள் மாநில செயலாளர் ஆஸாத் பாதுஷா, வெ.இ.சன்ஸ், பெரோஸ்கான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# INDHU TAMIL ISAI 03.04.2022



▲ மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்குகிறார், தமிழ்நாடு சிறுபான்மை நல ஆணையத் தலைவர் எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

## அன்னை ஹாஜிரா கல்லூரி பட்டமளிப்பு விழா

■ திருநெல்வேலி

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் 18-வது ஆண்டு விழா மற்றும் 14-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

கல்லூரி தலைவர் எஸ்.கே. செய்யது அஹமது தலைமை வகித்தார். கல்லூரி தாளாளர் எஸ்.கே. குதா முகம்மது, அஸ்ஸாதிக் கல்வி கூட்டமைப்பு உறுப்பினர்கள் இ.எம். நிஜாமுத்தீன், காதர் மைதீன், அமானுல்லா, எஸ். எம். காஜா நஜிமுத்தீன், முஹம்மது ஹனீப் முன்னிலை வகித்தனர். முதல்வர் கே. ரஜப் பாத்திமா ஆண்டறிக்கை வாசித்தார். அஸ்ஸாதிக் கல்வி கூட்டமைப்பு பொருளாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார்.

பாளையங்கோட்டை சட்டப் பேரவை உறுப்பினர் மு. அப்துல்வஹாப், டாக்டர் எம். அமீர்கான், ஐக்கிய அரபு அமீரகங்கள் வெளிநாடு வாழ் தமிழர்கள் இந்திய நலச்சங்க தலைவர் எஸ்.எஸ். மீரான், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம். சரவணன், துணை மேயர் கே.ஆர். ராஜு, முன்னாள் எம்.பி. விஜிலா சத்தியானந்த், தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை பொதுச்செயலாளர் வி.எஸ். அன்வர் பாதுஷா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தி புரொபஷனல் கூரியர் நிர்வாக இயக்குநர் எஸ். அஹமது மீரான் சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு சிறுபான்மை நல ஆணையத் தலைவர் எஸ். பீட்டர் அல்போன்ஸ் பட்டம் வழங்கினார். விழாவில் 295 இளங்கலை, 9 முதுகலை மாணவியர் பட்டம் பெற்றனர்.

# DINAMALAR 03.04.2022



■ மேலப்பாளையத்தில் நடந்த விழாவில் கல்லூரி மாணவிகளுக்கு பட்டங்களை தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய கமிட்டி தலைவர் பீட்டர் அல்போன்ஸ் வழங்கினார்.

## மேலப்பாளையத்தில் இருபெரும் விழா

**திருநெல்வேலி, ஏப். 3–**

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் 18ம் ஆண்டு விழா மற்றும் 14வது பட்டமளிப்பு விழா ஆகிய இருபெரும் விழா நடந்தது.

இதில் மேலப்பாளையம் அலிய்யா அரபிக் கல்லூரி பேராசிரியர் அஷ்ரப் அலி பாகவி கிரா அத் ஓதினார்.

அஸ்ஸாதிக் கல்வி கூட்டமைப்பு தலைவர் செய்யது அகமது தலைமை வகித்தார். கல்லூரி தாளாளர் குதா முகம்மது, முன்னிலை வகித்தார்.

கூட்டமைப்பு பொருளாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார். கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா ஆண்டறிக்கை படித்தார்.

இதில் 298 இளங்கலை, 9 முதுகலை மாணவிகளுக்கு பட்டங்களை தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல் போன்ஸ் வழங்கி பட்டமளிப்பு உரையாற்றினார்.

எம்எல்ஏ அப்துல் வகாப், கப்பல் துறை முன்னாள் தேசிய ஆலோசகர் அமீர்கான், ஐக்கிய அரபு அமீரகங்கள் வெளிநாடு வாழ் தமிழர்கள் இந்திய நலச் சங்க தலைவர் மீரான், நெல்லை மாநகராட்சி மேயர் சரவணன், துணை மேயர் ராஜூ, முன்னாள் எம்.பி விஜிலா, தமிழ்நாடு ஜமா அத்துல் உலமா சபை பொது செயலாளர் அன்வர், நிர்வாக இயக்குனர் அகமது மீரான், பாதுஷா, காங்., மாநில செயலாளர் ஆலங்குளம் செல்வராஜ், மாநகராட்சி கவுன்சிலர் அம்பிகா முத்துதுரை, மாநில பொதுக்குழு உறுப்பினர் சுந்தரய்யா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## DINAKARAN 09.04.2022

### அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில்

# உலக சுகாதார தின விழா




நெல்லை, ஏப். 9: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில் உலக சுகாதார தின விழா நடந்தது. கல்லூரி தலைவர் செய்யது அகமது தலைமை வகித்துபேசினார். கல்லூரி தாளாளர் குதா முகம்மது முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்றார். கல்லூரி பொருளாளர் ஜாபர் சாதிக் பேசினார். மேலப்பாளையம் அரசு மருத்துவமனை ஆற்றுப்படுத்துநர் ஞானதுரை அறிமுக உரையாற்றினார். தோல் நிபுணர் இந்திரா, தோல் மற்றும் உடல் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு செய்திகளையும், மகளிர் மற்றும் குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர் காந்திமதி பெண்களுக்கான மருத்துவம், ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு செய்திகளையும் வழங்கினார். காசநோய் சிகிச்சைப் பிரிவு மேற்பார்வையாளர் மகபூப் அலி காசநோய் குறித்த விழிப்புணர்வு செய்திகளை வழங்கினார்.

விழாவில் கலந்து கொண்ட மாணவிகளும், பேராசிரியர்களும் உலக சுகாதார தின உறுதி மொழி ஏற்றனர். ஏற்பாடுகளை கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் ராமலெட்சுமி செய்திருந்தார்.

# DINAMANI 11.04.2022

## இன்றைய நிகழ்ச்சிகள்

### திருநெல்வேலி

**அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்:** சித்திரை தேர்த் திருவிழா, மயில் வாகனத்தில் சுவாமி வீதியுலா, காலை 6.30, பூங்கோயில் சப்பரத்தில் வீதியுலா, குறுக்குத்துறை, நகரம், இரவு 7.

**அருள்மிகு திரிபுராந்தீசுவரர் திருக்கோயில்:** சித்திரைப் பெருந்திருவிழா, சப்பரத்தில் சுவாமி வீதியுலா, காலை 7.30, இந்திர வாகனத்தில் சுவாமி–அம்பாள் வீதியுலா, பாளை., இரவு 7.30.

**அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரி:** மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் பேச்சுப் போட்டி, பங்கேற்பு: மாவட்ட ஆட்சியர் வே.விஷ்ணு, கல்லூரி வளாகம், மேலப்பாளையம், காலை 9 மணி.

# DINAKARAN 12.04.2022

சிறுபான்மை நல ஆணையம் சார்பில் பேச்சுப் போட்டி

# போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்பதே வெற்றியாகும்

## கலெக்டர் விஷ்ணு பேச்சு



நெல்லை, ஏப். 12: போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்பதே வெற்றியாகும் என நெல்லை மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரியில் மாநில சிறுபான்மை ஆணையம் நடத்திய பேச்சுப் போட்டியைத் துவக்கிவைத்த கலெக்டர் விஷ்ணு தெரிவித்தார்.

மாநில சிறுபான்மை ஆணையம் சார்பில் அனைத்து கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான பேச்சுப் போட்டி நெல்லை மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரியில் நடந்தது. கல்லூரித் தலைவர் செய்யது அகமது தலைமை வகித்தார். தாளாளர் குதா முகமது, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் குமரேஷ், அந்தோனி செல்வராஜ் முன்னிலையில் நடந்த இப்பேச்சுப் போட்டிகளை துவக்கிவைத்து கலெக்டர் விஷ்ணு பேசுகையில் "தமிழக முதல்வர் 'தலை நிமிரும் தமிழகம்' என்ற லட்சியத்தை கல்லூரி மாணவ, மாணவிகளிடம் கொண்டுசேர்க்க சிறுபான்மை ஆணையம் சார்பில் அனைத்துக் கல்லூரிகளிலும் தமிழ், ஆங்கிலத்தில் பேச்சுப் போட்டிகள் நடத்த ஏற்பாடு செய்துள்ளார். கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் கலை, அறிவியல், மருத்துவம், சட்டம், பொறியியல், தொழில்நுட்பம் ஆகிய பாடத்திட்டங்களை கடந்து மாணவர்கள் அறிந்தும், உணர்ந்தும், தெரிய வேண்டிய உன்னத செயல்களை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தவும், மொழி, பண்பாடு, இலக்கியம், கலைகள், வரலாறு ஆகியவற்றின் புரிதல்களையும், இன உணர்வை பெற்றிட இப்போட்டிகள் வழி வகுக்கும். இவ்வாறு போட்டிகளில் பங்கேற்பதே ஒரு வெற்றியாகும். எனவே, அனைத்து மாணவ, மாணவிகளும் போட்டிகளில் பங்கேற்று தங்கள் ஆற்றல் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

இதில் மாநில ஒருங்கிணைப்பாளர் நெடுஞ்செழியன், முன்னாள் எம்.பி. விஜிலா சத்யானந்த், கப்பல்துறை முன்னாள் தேசிய ஆலோசகர் அமீர் கான், மேலப்பாளையம் முஸ்லிம் மேல்நிலைப் பள்ளித் தாளாளர் எல்கேஎஸ் மீரான் மைதீன், பாளை. சாராள் தக்கர் கல்லூரி முதல்வர் உஷா காட்வின், சதக்கத்துல்லா கல்லூரி முதல்வர் முகமது சாதிக், இக்னேஷியஸ் கல்வியியல் கல்லூரி முதல்வர் வசந்தி மடோனா, தூய சவேரியார் கல்லூரி செயலாளர் அல்போன்ஸ் மாணிக்கம், மேலப்பாளையம் மண்டல தலைவர் கதிஜா இக்லாம் பாசிலா, மாநகராட்சி கவுன்சிலர் ரம்சான் அலி மற்றும் அரசு அலுவலர்கள், மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். முன்னதாக அல்லா இக்கல்விக் கூட்டமைப்பு பொருளாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார். கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா நன்றி கூறினார்.